


## அர்ஜெண்டினா

இயற்கை வளமிக்க தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றுதான் அர்ஜெண்டினா. சின்ன சின்ன மலைகள் அதிகம். அகோன்காக்தான் உயரமான மலை. எவரெஸ்ட் மலைக்கு அடுத்து உயரமான மலை இதுதான். வடக்கே போலிவியாவும், பராகுவேயும், கிழக்கே உருகுவே மற்றும் பிரேசிலும் உள்ளன. விவசாயம், ஆடு வளர்ப்பு முக்கிய தொழில்கள்.

அதிபர் : நெஸ்டர் கிர்ஷனர்.



பரப்பளவு : 2,736,690 சதுர கிலோ மீட்டர்.

மக்கள் தொகை : 39,92,833.

தலைநகர் : பியூனோஸ் ஏரிஸ்.

முக்கிய நகரங்கள் : கர்டோபா, ரொசிரியோ, மென்டோசா மார்டி பிளாட்டா.

மொழிகள் : ஸ்பானிஷ், ஆங்கிலம், இத்தாலி, ஜெர்மன், பிரெஞ்ச்.

இனம் : ஸ்பானியர்கள்.

மதம் : ரோமன் காதலிக் 92, பிராட்டஸ்டண்ட் 2 சதவிகிதம்.

கல்வி அறிவு : 96.2 சதவிகிதம்.

விவசாயம் : சூரியகாந்தி, எலுமிச்சை, சோயாபீன்ஸ், திராட்சை, புகையிலை, டீ, கோதுமை.

தொழில்கள் : உணவுப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள், ஜவுளி, ரசாயனம், இரும்பு.

இயற்கை வளம் : உரம், தகரம், செம்பு, இரும்பு, எஃகு, மாங்கனீஸ், பெட்ரோலியம்.

ஏற்றுமதி : உணவு எண்ணெய், மோட்டார் வாகனங்கள்.

இறக்குமதி : இயந்திரங்கள், ரசாயனப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள்.

வர்த்தக தொடர்பு : பிரேசில், அமெரிக்கா, சீனா, ஸ்பெயின், ஜெர்மனி.

போக்குவரத்து:ரயில்வே:34,091கி.மீ.,சாலைப்போக்குவரத்து.

துறைமுகங்கள் : பிசியா பிளாங்கா, பியூனோஸ் ஏரிஸ், உருகுவே, லாபிளாட்டா, புன்டாகலாரோடா, சான்நிகோலாஸ் மற்றும் சில இடங்கள்.

விமான நிலையங்கள் : 1334.

அர்ஜெண்டினா முதலில் 1516-ம் ஆண்டுதான் கண்டுபிடிக்கப்பட்டது. ஸ்பானிஸ் காலனி ஆதிக்கத்தின் கீழ் இந்நாடு மெதுவாக வளர்ச்சி அடைந்து வந்தது. பியோனஸ் ஏரிஸ் இங்கு 1580-ம் ஆண்டு தங்கி ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்தினர். 1600 வரை இங்கு கால்நடைதான் முக்கிய தொழிலாக இருந்தது. 1806-1807-ல் பிரிட்டிஷ் படைகள் இங்கு தாக்குதல் நடத்தி கைப்பற்றினர். 1808-ம் ஆண்டு ஸ்பெயினைக் கைப்பற்றிய நெப்போலியன் 1810-ம் ஆண்டு அர்ஜெண்டினாவையும் தன் ஆளுகைக்குள் கொண்டு வந்தார். 1816-ம் ஆண்டு ஜூலை 9-ம் தேதி அர்ஜெண்டினா சுதந்திரம் பெற்றது. முதல் உலகப்போரிலும், இரண்டாம் உலகப்போரிலும் அர்ஜெண்டினா நடுநிலை வகித்தது.

1946-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஜுவான் டிபிரோன் அதிபரானார். அவருடைய இரண்டாவது மனைவி எவிட்டா தொழிலாளர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக விளங்கினார். தொழிற்சங்கப்பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். எவிட்டா மறைவுக்குப் பின்னர் அர்ஜெண்டினாவில் ராணுவ சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டது. பிரோன் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். அவரது மூன்றாவது மனைவி துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1974-ம் ஆண்டு பிரோன் மரணமடைந்தார். அவரது மனைவி இசபெல்மார்டினஸ் முதல் பெண் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1975-ம் ஆண்டில் தீவிரவாத இயக்கம் பரவியது. 700-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1976-ம் ஆண்டு லெப்டினண்ட் ஜெனரல் ஜோர்ஜ் ரபேல் விடேலா ஆட்சியைக் கைப்பற்றி ராணுவ ஆட்சியை ஏற்படுத்தினார். அப்போது 2,300-க்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் கொல்லப்பட்டனர். 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசியல் கட்சியினர் கைது செய்யப்பட்டனர். 30 ஆயிரம் பேர் காணாமல் போய்விட்டனர்.

1983-ம் ஆண்டு அக்டோபரில் நடந்த அதிபர் தேர்தலில் ராவுல் அல்போன்சின் வெற்றி பெற்றார். 1989-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் அவரே வெற்றி பெற்றார். ஆனால் அதே ஆண்டில் அர்ஜெண்டினாவில் கடும் விலைவாசி உயர்வால் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1998-ம் ஆண்டு மெனாம் ஆட்சி காலத்தில் அர்ஜெண்டினா பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஊழல் தலைவிரித்தாடியது. அதனால் மக்கள் செல்வாக்கை இழந்தார். 1999 டிசம்பரில் நடந்த தேர்தலில் பெர்னாண்டோ டி லா ராவு அதிபரனார். அவரது ஆட்சியிலும் நாடு பெரும் பொருளாதார சீரழிவுக்குள்ளானதால் 2001 டிசம்பரில் அவர் பதவி விலகினார். 2002 ஜனவரியில் நடந்த தேர்தலில் டொர்டோ டு கால்டே அதிபரனார். அவர் ஆட்சிகாலத்திலும் பஞ்சமும், வறுமையும் தலைவிரித்தாடியது. 2003 மே மாதம் நடைபெற்ற தேர்தலில் நெஸ்டோ கிர்ஷனர் அதிபரானார். அதன் பின்னர் அர்ஜெண்டினா பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டது.

இப்போது இந்தியாவில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து அர்ஜெண்டினாவும் ஒரு விண்வெளி செயற்கைகோள் அனுப்பி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## நாட்டு நடப்பு

தமிழகத்தில் பூக்கள் விலை கடும் உயர்வு.

- செய்தி.




# பள்ளிச்சிறுவர்கள் வடிவமைத்த சாட்டிலைட்

ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளின் தொழில் நுட்ப ஆராய்ச்சியின் விளைவாக, ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளத்திலிருந்து பி.எஸ்.எல்.வி. - சி 7 ராக்கெட் கடந்த திங்களன்று விண்ணில் ஏவப்பட்டது.

துல்லியமாக திட்டமிட்டபடி 4 செயற்கைக் கோள்களை சுமந்து சென்று புவிவட்டப்பாதையில் சரியான இடங்களில் வெவ்வேறு திசைகளில் நிலை நிறுத்தியது.


கடந்த 20 ஆண்டுகால வானவியல் ஆராய்ச்சியில் இந்தியா பெற்றுள்ள வியத்தகு சாதனையை உலக நாடுகளின் விஞ்ஞானிகள் பாராட்டுகின்றனர். அமெரிக்கா, ரஷ்யா, சீனாவுக்கு அடுத்தபடி செயற்கைக் கோள்களை மீண்டும் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை இந்திய விஞ்ஞானிகள் கையாண்டுள்ளனர்.

பி.எஸ்.எல்.வி ராக்கெட்டை ஏவியது ஆயிரக்காக பயன்படுத்த இருக்கிறது.

தென் அமெரிக்காவில் பிரேசிலுக்கு அடுத்து மிகப் பெரிய நாடான அர்ஜெண்டினா பொருளாதார சிக்கலில் தத்தளிக்கும் நாடாகும். அங்கு மிகச் சிறந்த கற்றறிவாளர்களோ, தொழில்நுட்பத்தில் தலைசிறந்த விஞ்ஞானிகளோ இல்லை.


போதுமான நிதி ஆதாரமோ, கட்டமைப்பு வசதிகளோ, மனிதவளமோ இல்லை என்றாலும், கல்வி பணிக்காக செயற்கைக் கோளை அனுப்புவது என்பதில் அந்நாட்டினர் உறுதியாக இருந்தனர்.

அர்ஜெண்டினா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஆம்சாட், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவை இணைந்து கல்வி வளர்ச்சியை முக்கிய குறிக் கோளாகக் கொண்டு பல்வேறு சிரமங்களையும் சமாளித்து தற்போது ஹ்யூன் சாட் என்ற இந்த செயற்கைக்



## ஹ்யூன் சாட் பெயர் வந்த கதை

அர்ஜெண்டினா அனுப்பி உள்ள சாட்டிலைட்டுக்கு ஹ்யூன்சாட் என்ற பெயர் வைத்தது ஏன் என்பது குறித்த தகவல்கள் ஆச்சர்யத்தை அளிக்கின்றன.



அர்ஜெண்டினாவின் மேற்கு பகுதியில் நீண்ட ஆன்டிஸ் மலைத் தொடர் உள்ளது. இதற்கும் அட்லாண்டிக் கடலுக்கும் இடைப்பட்ட பகுதிக்கு பாட்டகோனியா என்று பெயர்.

அழகிய ஏரிகளும், உயர்ந்த மலைச் சிகரங்களும் உள்ள இப்பகுதியில் மட்டுமே விளையக்கூடிய 'ஹ்யூன்' மரத்தின் பழங்கள் மிகுந்த சுவை உடையவை. இந்த மரங்களுக்கும் ஒரு கதை உண்டு.

அர்ஜெண்டினாவில் ஸ்பெயினைச் சேர்ந்தவர்கள் படையெடுத்து அந்நாட்டை கைப்பற்றினர். இதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன் அங்கு செவ்விந்தியர்கள் வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் ஹ்யூன் மரங்களை கடவுளே அமைத்ததாகவும், அப்பழங்கள் விஷத்தன்மை வாய்ந்தவை என்றும் கருதி அவற்றை சாப்பிடுவதில்லை. பாட்டகோனியாவில் ஒரு முறை குளிர்காலத்தில் அங்கிருந்த பகுதி முழுவதும் பனியால் மூடப்பட்டுவிட்டது. மக்கள் உண்ண வழியின்றி பசியால் வாடினர்.

அப்போதும் அவர்கள் ஹ்யூன் பழங்களை தொடக்கூட விரும்பவில்லை. செவ்விந்தியர்களின் தலைவன் காடு, மலையெல்லாம் அலைந்து உண்ண ஏதாவது வழி கிடைக்குமா என்று தேடினான். சோர்ந்து, அயர்ந்து ஓரிடத்தில் அமர்ந்திருந்தபோது அருகில் வந்த ஒரு கிழவன் என்ன தேடுகிறாய் மகனே? என்று அன்பொழுக கேட்டாராம்.

தலைவன் அவரிடம் கண்ணீர் விட்டு கதறி அழுது, எங்கு பார்த்தாலும் பனிக்கட்டிதான். வேறு ஒன்றுமே கண்ணுக்கு தெரியவில்லை.

எங்கு பார்த்தாலும் தொங்கிக் கொண்டிருக்கும் ஹ்யூன் பழங்களையும் சாப்பிட முடியாது. அவை விஷத்தன்மை மிக்கவை. என் மக்கள் உண்ண உணவின்றி செத்துமடிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களை காக்க வழியின்றி தவிக்கின்றேன் என்று கிழவரிடம் மனம் குமுறினான்.

இதைக் கேட்ட அந்த கிழவர் புன்னகையுடன், அமைதியாக பதிலளித்தார். 'மகனே, கடவுள் கொடுத்த பரிசா நம்மை பாதிக்கும். அந்த பழங்கள் நீங்கள் உயிர்வாழ்வதற்காகவே படைக்கப்பட்டவை. அதில் எந்த விஷத்தன்மையும் இல்லை. அப்பழங்களை கொதிக்கவைத்து சாப்பிட்டால் சுவையாக இருப்பதோடு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். பல ஆண்டுகள் இதையே ஆகாரமாக கொண்டு வாழலாம்' என்றார்.

மிகுந்த பணிவுடன் செவ்விந்திய தலைவன் அவர் கூறியதைக் கேட்டுக்கொண்டான். அறிவுரை கூறிய கிழவர் அங்கிருந்து திடீரென மறைந்துவிட்டார்.

இதை கடவுளின் வாக்காகவே கருதி அந்த பகுதி மக்கள் ஹ்யூன் பழங்களை உணவாகக் கொள்ளத் தொடங்கினர். இன்றைக்கும் அர்ஜெண்டினா மக்களின் சத்துள்ள உணவு ஹ்யூன் பழங்கள்தான் என்றால் மிகை இல்லை.

பசியால் துடித்தவர்களுக்கு உணவாகப் பயன்பட்ட ஹ்யூன் பழங்களை நினைவுகூறும் வகையில், அதே பெயரிடப்பட்ட 'ஹ்யூன் சாட்டிலைட்' அர்ஜெண்டினா மக்களின் அறிவுப்பசியை போக்குவதில் முக்கிய பங்கு வகிக்கப்போவது நிச்சயம்!

கணக்கான இஸ்ரோ விஞ்ஞானிகளின் ஒட்டுமொத்த முயற்சியின் வெளிப்பாடு என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது.

இந்த ராக்கெட்டில் அனுப்பப்பட்ட 4 செயற்கைக் கோள்களில் அர்ஜெண்டினா நாட்டின் ஹ்யூன் சாட் (Pehuensat) செயற்கைக் கோளும் ஒன்று.

6 கிலோ எடை கொண்ட மிகச் சிறிய இந்த செயற்கைக்கோளை அர்ஜெண்டினா கல்வி வளர்ச்சிக் கோளை இந்தியாவிலிருந்து அனுப்பி உள்ளது.

ஹ்யூன் சாட் செயற்கைக்கோளை தயாரிக்க தீர்மானித்த போது எந்தவித கட்டமைப்பு வசதிகளும் இல்லாத நிலையில் செயற்கைக்கோள் திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பள்ளி, கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்கள் தங்கள் பங்களிப்பை செய்தனர்.

இந்த செயற்கைக் கோளை வடிவமைத்து, தயாரித்து ஒருங்கிணைப்பதில் அர்ஜெண்டினாவின் பொறியியல் கல்லூரி மாணவர்கள் முக்கிய பங்கு வகித்தனர்.

கல்வி, பொறியியல், அறிவியல் ஆகியவற்றில் ஹ்யூன் சாட் செயற்கைக் கோளை ஏவியதன் மூலம் விண்வெளி ஆராய்ச்சில் முக்கிய அனுபவம் கிடைக்கும் என நம்புகின்றனர். ஆரம்ப, நடுநிலை பள்ளிகளில் மாணவர்கள் இந்த செயற்கைக்கோளை பயன்படுத்திக் கொள்வார்கள்.

வல்லரசு நாடுகள் மற்றும் பணக்கார நாடுகள் தங்கள் செல்வாக்கை உயர்த்திக்கொள்ளவும், பகட்டுத்தன்மையை வெளிக்காட்டவும் ஊதாரித்தனமாக பல கோடிகளை கொட்டி வீணாக்குகிறது.

யாருக்குமே எள்ளளவும் பயன்படாமல் பணத்தை செலவிடும் போக்கை கடைபிடித்து வருகின்றன. போருக்காகவும், ராணுவத்திற்காகவும் அள்ளி அள்ளி வாரி இறைக்கின்றன.

திறமை எங்கிருந்தால் என்ன? அவர்களைத் தேடிச் சென்று உதவி அளிப்பதுதான் பணம் படைத்தவர்களின் பணியாக இருக்கவேண்டும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய அதே நேரத்தில், செயற்கைக்கோளையே வடிவமைக்கும் திறமை பெற்ற அர்ஜெண்டினா போன்ற நாடுகளின் இளைஞர்களை அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகள் ஊக்குவிக்குமா?

# அன்புள்ள ஆசிரியருக்கு...

### ஆண்களை குறை சொல்லாதீர்கள்

பொது இடங்களில் பெண்கள் சிலர் அண்மைக்காலமாக நடந்து கொள்ளும் முறை மிகுந்த கவலையளிக்கிறது. நாகரீகம் என்ற பெயரில் அரைகுறை ஆபாச உடைகளை அணிவதும், நான்கு பேர் நம்மை கவனிக்கிறார்களே என்கிற எண்ணம் இன்றி அநாகரீகமாக நடந்து கொள்வதும் இவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது. இவர்களின் இத்தகைய செயல்கள் சராசரியான ஆண்களைக் கூட சபலத்தில் தள்ளி விடுகின்றன. கற்புக்கு இலக்கணம் வகுத்த கன்னித் தமிழ்நாட்டுப் பெண்கள் இனியேனும் பொறுப்போடு செயல்பட வேண்டும். தங்கள் பக்கம் இருக்கும் தவறுகளை திருத்திக் கொள்ளாமல் ஆண்களை குறை சொல்வதில் அர்த்தமில்லை.

-குமரேசன், மந்தைவெளி.

### சுகாதாரத்திற்கு முன்னுரிமை

சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ள ஆயிரக்கணக்கான பேருக்கு கையேந்தி பவன்கள் எனப்படும் சாலையோர உணவகங்கள்தான் பெரும்பாலும் பசி தீர்த்து வருகின்றன. மிகக் குறைந்த விலையில் இங்கு உணவுப் பொருட்கள் கிடைப்பதால் ஏழை, எளியவர்கள் மற்றும் தொழிலாளர்கள் கூட்டம் இங்கு எப்போதும் அலைமோதுகிறது. விலை மலிவு, சுவையும் பரவாயில்லை என்றபோதிலும் பெரும்பாலான சாலையோர உணவகங்கள் சுகாதாரமற்ற நிலையிலேயே உள்ளன. இதன் காரணமாக அங்கு உணவு அருந்துபவர்களுக்கு பல்வேறு விதமான நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே சாதாரணமானவர்களின் பசி தீர்க்கும் சாலையோர உணவகங்கள் சுகாதாரத்திற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அரசுத்துறை அதிகாரிகளும் அடிக்கடி ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும்.

கந்தசாமி, அயனாவரம்.

### மாமூலுக்கு தடை விதிக்கப்படுமா?

புத்தாண்டு தொடங்கியது முதல் சென்னையின் பல்வேறு பகுதிகளில் போலீசார் வாகன சோதனையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அதிலும் இரவு நேரங்களில் இத்தகைய சோதனைகள் வாகன ஓட்டிகளை பெரிதும் சிரமத்தில் ஆழ்த்தும் வகையில் நடைபெற்று வருகின்றன. சமூக விரோதிகளை கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்க இதுபோன்ற சோதனைகள் அவசியம்தான். ஆனால் சோதனை என்ற பெயரில் அப்பாவி வாகன ஓட்டிகளிடம் பணம் கறக்கும் போலீசாரின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. எல்லாவிதமான ஆவணங்களை காட்டிய பிறகும் வண்டியை நிறுத்தியதற்காக பணம் கேட்கும் கொடுமைகள் பல இடங்களில் அரங்கேறி வருகின்றன. காவல்துறை உயர் அதிகாரிகள் இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

-ரமேஷ், செங்கல்பட்டு.

### போலிகளை புறந்தள்ளுங்கள்

உண்மையான ஆன்மீகம் தழைத்தோங்கிய நமது நாட்டில் தற்போது ஏகப்பட்ட போலி சாமியார்கள் உலா வரத் தொடங்கியுள்ளனர். மந்திர, தந்திர வித்தைகளை காட்டி காண்பவரை மயக்கும் இவர்கள் மக்களிடமிருந்து லட்சக்கணக்கில் பணத்தையும் சுருட்டி விடுகின்றனர். இப்படி சுருட்டிய பணத்தில் ஆன்மீகத்திற்கு சற்றும் ஒவ்வாத காரியங்களில் ஈடுபட்டு, உண்மையான பக்திக்கு களங்கம் விளைவிக்கிறார்கள். இதற்கு எல்லாமே அடிப்படை காரணம் மக்களின் மூடநம்பிக்கைதான். எல்லாம் அறிந்த ஆண்டவனை நேரடியாகவே வணங்கி நமது கோரிக்கைகளை முன வைக்கலாம். இதற்கு இடைத்தரகர்கள் யாரும் தேவையில்லை. இந்த உண்மையை பொதுமக்கள் உணர்ந்து செயல்பட்டால் போலி சாமியார்கள் நாளாவட்டத்தில் காணாமல் போய்விடுவார்கள்.

-சுனிதா, காரைக்கால்

## முச்சந்தி



அரசியல் சட்ட விதி முறைகளுக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் இடையே நடுநிலையான போக்கை கடைபிடிக்க வேண்டும்.

- உச்ச நீதிமன்றம்.

இடஒதுக்கீடு தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு பிரச்சனைக்கு தீர்வு ஆகாது.

- கருணாநிதி.

சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காக விவசாயிகளின் விளை நிலங்களை எந்த வகையிலும் கையகப் படுத்தக்கூடாது.

- ஜெயலலிதா.

போகிப்பண்டிகையை யொட்டி நச்சு வாயுக்களை வெளிப்படுத்தும் பிளாஸ்டிக், டயர் போன்ற பொருட்களை எரித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- மைதீன்கான்.

விவசாய கலாச் சாரத்தைவிட திறந்தநிலை பல்கலைக்கழகம் வேறு இல்லை.

- வைரமுத்து.

ஆட்டோ கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் இனிமேலாவது மீட்டர் கட்டணத்தை மட்டும் வசூலிக்கும் நிலைமை ஆட்டோ டிரைவர்களிடம் வர வேண்டும்.

-இல.கணேசன்.

அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணை தொடர்பாக உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பால் ஏற்பட்டுள்ள குழப்பம் பற்றி விவாதிக்க முதலமைச்சர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும்.

- ராமதாஸ்.

பி.எஸ்.எல்.வி. சி-7 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட நான்கு செயற்கைகோள்களின் செயல்பாடுகள் திருப்தி கரமாக உள்ளன.

- இஸ்ரோ மைய இயக்குனர் சுரேஷ்.

உ.பி.யில் குடியரசு தலைவர் ஆட்சியை அமுல் படுத்தி சட்டபேரவை தேர்தலை தள்ளிவைக்க காங்கிரஸ் சதி செய்கிறது.

- முலாயம் சிங்யாதவ்.

விண்ணிலிருந்து பார்க்கும் போது இந்தியா மிக அழகாக இருக்குகிறது.

- சுனிதா வில்லியம்ஸ்.

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு முன்பாக நடைபெறும் அனைத்து ஆட்டங்களிலும் இந்தியா வெற்றி பெற வேண்டும் தேர்வுக்குழு என்று விரும்புகிறது.

- வென்சர்க்கார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண் கைதிகள் காலை, மாலை ஒரு மணிநேரம் டி.வி. பார்க்க அனுமதிக்க வேண்டும்.

- சென்னை உயர்நீதிமன்றம்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னையிலுள்ள குடிசைபகுதிகளில் சமத்துவ பொங்கல் விழா நடத்தப்படும்.

- லத்திகா சரண்.

தரமான படங்களுக்கு மட்டுமே வரி விலக்கு அளிக்க வேண்டும்.

-தமிழக தேசியவாத காங். தலைவர் வி.பி. சாரதி.

அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக தென்னக நதிகளை ஒன்றிணைக்க வேண்டும்.

- ஜனநாயக முன்னேற்ற கழகம்.

ம.தி.மு.க.வுடனான உறவை முறித்தால் அதிமுகவுடன் கூட்டணி சேரத் தயார்.

- சுப்பிரமணியசாமி.




# Argentina

Argentina, blessed by the nature, is bordered by Bolivia and Paraguay on the north, by Uruguay and Brazil on the east. The northern area is the swampy and partly wooded Gran Chaco, bordering on Bolivia and Paraguay. South of that are the rolling, fertile Pampas, which are rich in agriculture and sheep- and cattle-grazing and support most of the population.



**President:** Néstor Kirchner
**Area:** 2,736,690 sq km
**Population:** 39,92,833
**Capital:** Buenos Aires
**Large cities:** Córdoba, Rosario, Mendoza, Mar del Plata
**Languages:** Spanish, English, Italian, German, French
**Ethnicity :** Spanish
**Religion:** RC, Protestant.
**Literacy Rate:** 96.2%
**Agriculture:** sunflower seeds, lemons, soybeans, grapes, corn, tobacco, peanuts, tea, wheat; livestock.
**Industries:** food processing, motor vehicles, consumer durables, textiles, chemicals and petrochemicals, printing, metallurgy, steel.
**Natural resources:** fertile plains of the pampas, lead, zinc, tin, copper, iron ore, manganese, petroleum, uranium
**Exports:** Edible oils, fuels and energy, cereals, feed, motor vehicles.
**Imports:** Machinery and equipment, motor vehicles, chemicals, metal manufactures, plastics.
**Major trading partners:** Brazil, Chile, U.S., China, Spain, Germany
**Transportation: Railways:** total: 34,091 km
**Ports and harbors:** Bahia Blanca, Buenos Aires, Concepcion del Uruguay, La Plata, Punta Colorada, Rosario, San Lorenzo-San Martin, San Nicolas.
**Airports:** 1,334

First explored in 1516 by Juan Díaz de Solis, Argentina developed slowly under Spanish colonial rule. Buenos Aires was settled in 1580; Invading British forces were expelled in 1806–1807, and after Napoléon conquered Spain (1808), the Argentinians set up their own government in 1810. On July 9, 1816, independence was formally declared.

The former dictator returned to power in 1973 and his third wife, Isabel Martínez de Perón, was elected vice president. After Perón's death in 1974, she became the hemisphere's first woman chief of state, assuming control of a nation teetering on economic and political collapse. In 1975, terrorist acts by left- and right-wing groups killed some 700 people. The cost of living rose 355%, while strikes and demonstrations were constant. On March 24, 1976, a military junta led by army commander Lt. Gen. Jorge Rafael Videla seized power and imposed martial law.

On April 2, 1982, Galtieri invaded the British-held Falkland Islands, known as Las Islas Malvinas (Malvinas Islands) in Spanish, in what was seen as an attempt to increase his popularity. Great Britain, however, won a decisive victory, and Galtieri resigned in disgrace three days after Argentina's surrender. Maj. Gen. Reynaldo Bignone took over June 14, amid increasing prodemocratic public sentiment. As the 1983 elections approached, inflation hit 900% and Argentina's crippling foreign debt reached unprecedented levels.
It is notable at this moment that Argentina has sent a satellite to the orbit from Sreeharikota recently.

## Customary...

Price of flowers goes steep high in Tamilnadu state
- News.

Don't beat about the bush.. tell me the price is too hot and I didn't buy flowers.. not to say "Yourself being a flower why do you need a flower" and so...



# Satellite Designed By School Children

**As a result of the technical reasearch by thousands of scientists, the PSLV C-7 rocket has been launched from Sriharikotta Space Centre.**

**The rocket has taken and parked all the 4 satellites at the right slots in the orbit as planned.**

**Scientist from all over the world appreciates Indias achivements in space research during the past 20 years. Indian scientists have made India the 4th nation in the world to develop reusable space capsules after America, Russia and China.**

**Doubtlessly, successful launching of PSLV is the yield of rigorous research efforts of thousands of ISRO engineers.**

**Argentinas Peheunsat is the one among the four satellites sent with this rocket.**

**Weighing about 6 kgs, this nano satellite is intended for educational research purposes.**

**At south america, Second to Brazil in area, Argentina is trying its level best to improve its economical status. The science and technology sector has not received relevant backup yet.**

**Despite all the hurdles like infrastructure, human resources and all, they were too optimistic and well determined in sending a satellite for educational research purposes.**

**AMSAT, a not for profit space research organization and some other institutions together materialised Peheunsat with a view to improve educational research and sent it to orbit from India.**

**Right from the beginning, elementary school children, ploy technic students and students of various age groups were active and seriously involved in this nano satellite program.**

**The Argentinan engineering students also dedicated their major participation in the design part.**

**The success of peheunsat nano satellite will be quite an experience for the Argentinan dynamic students. Elementary and Higher school children will make use of Peheunsat for their educational purposes.**

**Empires and Super powers of this world lavishly spent a lot of money for space research activities.**

**Most of these extra vaganza goes for the military purposes and not a boon for the general public. And they spent a lot just to show their military might.**

**The rich nations should come forward to encourage and help the talented from developing nations to boost their morale and help their dreams come true.**

**Despite all economic hurdles, nations like Argentina have shown their valuble skills and let us hope the rich nations like the US will help them to succeed.**



## The Story Behind the Name Peheunsat


It is quite interesting to see just why the Argentinan satellite was named 'Peheunsat"

The Andys mountains cascade through the western part of Argentina. The place between the Atlantic ocean and these mountains called 'Patagonia'.

The Peheun tree that grown in this area, blessed with beutiful lakes and mountain rows, do have tasty fruits. There is a story behind this tree.

The Red-Indians were the only inhabitants, hundreds of years before the spanish conquered Argentina.

The red indians believed that these peheun trees were a boon from God, they were reluctunt to eat those fruits for the fruit was considered poisonous.



Once upon a time, the patagonia region came under heavy snow fall and the whole population was starving for food.

Still they were reluctunt to eat the fruit of peheun tree. The leader of the red indians couldn't find any solution to this food shortage. While the leader was taking rest under a tree, an aged man came and asked him what makes him sad.

The leader started to weep and explained all what he could see around is snow and there is no trace of anything that is eatable.

Though there are plenty of Peheun fruits, we can't eat it for it is highly poisonous. My people are perishing and I am looking for a remeady to contain this deficiency of food... he opened up his mind before the old man.

Hearing this.. the old man smiled and started to answer him softly. Dear son... God has given us those trees and its fruits as a boon.. and those are not poisonous as you think of it. If you boil it and eat, it will be tasty and also highly nutritious to your people. you may survive for years and years with these fruit s alone.

The leader listened to his advice graciously and then the old man disappeared all in a sudden.

Considering it as a revealation from God the people in that area started to eat the Peheun fruit since then. Even today.. the peheun fruit is considered as one of the best nutritious fruit.

Honoring the tree and its fruit which came as a boon to contain the food shortage, the Argentinan satellite iss named after the Peheun tree.. let us hope the peheunsat will become another boon for the Argentinans and a boon to contain their quest for knowledge.




We should follow a moderate path between political rules and regulations & fundamental rights
High Court

The high court verdict on reservations fall short of a solution for the problem
Karunanidhi

Farmlands of the peasants must not be acquired to make special economic zones
Jayalalitha

Serious action will be taken if toxic materials (that emit toxic gases) are burnt in connection with the festival
Moideen Khan

There is no open university than that of the business culture
Vairamuthu

As the auto rikshaw fares are hiked, the auto drivers should mind to charge according to the fare meter.
L Ganesan

A group discussion of all chief ministers must be convened to debate the high court verdict regarding the amendment of govt. ordinance
Ramadas

All the four satellites that were launched with PSLV C-7 rocket are functioning satisfactorily
Suresh, director of ISRO Centre

The congress party is trying to impose presidents rule in UP to postpone the elections
-Mulayam Singh Yadav

India looks very beautiful when viewing from the space
-Sunitha Williams

The selection committee expects Indian team to win all the matches it plays before the World cup Cricket
-Veng Sarkar

Women prisoners must be allowed to watch TV atleast for an hour in the morning and evening
-Chennai High Court

In connection with the Pongal festival, a special program called the "equality pongal" will be conducted among the hut dwellers in Chennai city
-Lathika Charan
Police Commissioner

Only the best films be granted tax exception
-V.P. Sarathy

As part of nationalising rivers plan, the Chennai rivers must be linked first
-JMK

If relationship with MDMK party breaks, we are ready to join hands with ADMK
-Subramaniam sami

# Letters to the Editor

### Don't blame the men...

The way some women behave in public places causes concern as they come out with incomplete outfits in the name of modernism, they don't even consider that they are being watched by the people around them. Their flirting activities may mislead even the perfect gentlemen. Tamil culture has clear vision over chastity and Tamil women themselves breach the boundaries is strongly condemnable, and they must re-think and should come forward to bound to the customs. The women should correct themselves before they blame the men for misbehaviour.

-**Kumaresan, Mandaveli**.

### Will the bribe be banned?

Ever since the new year celebration, the vehicles are often stopped and checked by the police at different parts of the city. Sometimes, especially at night, the checking becomes too inconvenient for the passengers. Undoubtedly, such checkings are quite necessary to trace out and capture anti social elements. Still, the way the police 'looting' many by asking bribe in the name of a checking is strongly denied and condemned by many. Some drivers complaint that even after producing all the required documents they were asked bribe by the police. The higher police officials must look into the matter seriously?

-**Ramesh, Chengalpattu**.

### Priority for Cleanliness...

In cities like Chennai, most middle class people depend on the road side or platform kiosks. These road side kiosks are always crowded with middle class and lower middle class people for they provide standard food at quite affordable prices. Though the food is tasty and the prices are moderate, what they are lacking is cleanliness. This may endanger the health of those who eat food from such kiosks. The owners of such kiosks may give little more priority to keep the premises neat and clean. Also the govt. health inspectors too must keep an eye on them.

**Kandachami, Ayanavaram**.

### Reject those ingenuine priests

With such cultural heritage and strong religious backgrounds, we should not tolerate those who pretend as self imposed priests who often cheat the poor people with their black magic tactics. They are earning a lot of money by cheating and by these blasphemous acts they are defaming the real believers and their beliefs. The root cause could be superstiotion among many. They should keep in mind that they can pray to the God almighty and need no agents for that. Once our people realise the fact such ingenuine priests and Godmen will withdraw from their activities...

-**Sunitha, karaikkal**